www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 017

16 மே 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# மர்மமாக மறையும் சிறிலங்காப் படையினர்



விடுதலைப் புலிகளை அழித்து விட்டதாக சிறிலங்கா படையினர் அறிவித்துவிட்டபோதும் படையினரின் இறப்புக்களும் காணாமல் போதல்களும் இன்னும் தொடர்கின்றன என்று தெரிய வருகின்றது. 2007ம் ஆண்டு தென் தமிழீழத்தின் குடும்பிமலையை ஆக்கிரமித்திருந்த சிறிலங்கா, அங்கு தங்கள் சிங்கக்கொடியை ஏற்றி வெற்றி அறிவிப்பை வெளியிட்டனர். கிழக்கில் முழுமையாக புலிகள் அழிக்கப்பட்டு விட்டதாகவும் கூறியிருந்தனர். ஆனால் தற்போது வெளிவரும் செய்திகள் சிறிலங்காவிற்கு அச்சம் கொடுப்பவையாக உள்ளன.

கடந்த மாதம் குடும்பிமலையில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினரின் ஒன்பது உடல்கள் மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டிருந்தனவாம். எப்படி குண்டுபாய்ந்து இறந்தார்கள் என்பது இதுவரை இரகசியமாக இராணுவம் வைத்திருந்த நிலையில், கடந்த மாதம் 28ம் திகதி இன்னொரு தேடுதல் வேட்டைக்குப்போன இராணுவத்தின் சிறப்பு அணி ஒன்று இதுவரை முகாம் திரும்பவில்லையாம். விடுதலைப் புலிகளை முற்றாக அழித்துவிட்டதாக கூறிவிட்ட சிறிலங்கா இதனை வெளியில் சொல்ல முடியாது தேடுதல்களை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு படையினருக்கு உத்தரவிட்டுள்ளதாக அறியவருகின்றது. இதனையடுத்து, கடந்த 11ம் திகதி இன்னொரு அணியினர் தேடுதலுக்கு சென்றுள்ளனர். காட்டுக்கு சென்றதன் பின்னர் கடுமையான துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இதன் போதும் மேலும் ஒன்பது படையினரின் உடலங்களுடன்தான் படையினர் திரும்பி வந்துள்ளனர். இந்தச் செய்திகள் எவையும் வெளியே சென்றுவிடாதவாறு சிறிலங்கா ஊடகத் தணிக்கையை இறுக்கமாக வைத்துள்ளது. இதனால், இலங்கையில் எந்தவொரு ஊடகமும் இதனை வெளியிடாத போதும் சில இணையத் தளங்கள் இதில் சில தகவல்களை வெளியிட்டுள்ளன.

# தலைகாட்டத் தயங்கும் பாஸ்கி

நோர்வேயில் தேர்தலில் மண் கவ்விய பாஸ்கரன் தற்போது வெளியே தலை காட்டத் தயங்குகின்றார். சர்வே முதற்கொண்டு ராஜன், செல்வின் ஆகியோர் தற்போது தமது தோல்விகளை தாங்க முடியாமல் இருப்பதால் அவர்கள் மக்களை 'மாக்கள்' என அழைக்கின்றனர்.









**"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனோவின் அடியாள் சூப்பர்மான் பரணி

மனோவின் 'ரவுடியிச' அரசியலுக்கு வலது கரமாக இருப்பவர் இந்த பரணி. இவர் சொன்னதைச் செய்யும் சுப்பன். தானாக எதையும் யோசிக்கும் அளவுக்கு இவருக்கு மூளை இல்லை. முன்னர் பிரான்சின் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் விசாரணைப் பிரிவில் விசாரணைகளில் ஒத்துழைக்காதவர்களுக்கு அடிபோடும் அடியாளாக இவரை மனோ வைத்திருந்தார். ஒருமுறை ஒருவருக்கு இவர் அலுவலகத்தில் வைத்து அடிபோடும் போது அவர் கட்டடத்தில் இருந்து ஜன்னல் வழியாக வெளியே பாய்ந்து தற்கொலைக்கும் முயன்றுள்ளார். எப்போதும் மனோவின் காலை சுத்திவரும் சுப்பர்மான் பரணிக்கு, தான் பெரிய ரவுடி என்ற நினைப்பை மனோ தக்க வைத்துக் கொடுத்துள்ளார். அண்மையில் நடந்து முடிந்த நாடுகடந்த அரசாங்கத்தின் பம்மாத்து தேர்தல் திருவிழாவில் வெற்றி பெற்ற திருச்சோதிக்கு இருட்டடி போட வேண்டும் என்றும், சாலினியை கலைக்க வேண்டும் என்றும் முறுகல் எடுத்துள்ளார். எப்போதும் பொறுமை காக்கும் அல்லது கணினியில் காட்ஸ் விளையாடும் மனோவோ விடயம் வெளியே வராமல் கறுவல் அல்லது அடையாரை வைத்து இருட்டடி போடுமாறு பணித்துள்ளார்.

தூள் வியாபாரம் செய்து உள்ளே போய் வந்த மனோவுக்கு இது சகஜமான விடயமாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உசாராக இருப்பது நல்லது. காலம்மாறும், இயக்கப்பணத்தில் சாப்பிட்டு வாழ்ந்த மனோவுக்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும். இப்போ வேறு முதலைகளின் பணமும் அவ்வப்போது அவருக்கு வருவதால் தலைகால் புரியாமல் திரிகின்றார்.



# பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனியார்மயமானது

நாட்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இயங்கியபோது, அதற்குக்கீழ் பணிபுரிந்த அதன் பன்நாட்டு கிளைகள் தற்போதும் ஒரே பாதையில் இருக்கும் போது பிரான்ஸ் புனர்வாழ்வுக்கழகம் அதிலிருந்து விலகி தன்னிச்சையாக இயங்கப்போவதாக முடிவெடுத்துள்ளதையடுத்து தமிழ்ச்சமூகம் அதிர்சியடைந்துள்ளது.

வருடாந்தம் பல வழிகளில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு, அந்த வருவாயை தமிழீழத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வந்ததை யாவரும் அறிந்ததே. இப்படியாக இனிவரும் காலங்களில் சேகரிக்கப்படும் நிதிகள் யாருக்குச் சென்றடையும்? வருடாந்தம் பல இலச்சம் ஈரோக்களை அன்பளிப்புகளாக பெறுவது தெரிந்ததே. அத்துடன் யூலை மாதம் இவர்கள் நடத்த இருக்கும் விளையாட்டு விழாவில் பல ஆயிரங்களைச் சேகரித்து நாடு கடந்த அரசின் செயற்பாடுகளுக்கும் அவர்களின் சொந்தத் தேவைகளுக்கும் பயன்படுத்த திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை, பரிஸ் புறநகரில் கழகத்துக்குச் சொந்தமான பிரமாண்டமான மண்டபம் ஒன்று இயங்கி வருகின்றது. இந்த மண்டபம் தனியார் நிறுவனமாக பதியப்பெற்று இயங்கி வரும் அதேவேளை, சம்பந்தப்பட்ட மண்டபமும் புனர்வாழ்வுக்கழகத்தக்கு சொந்தமானதல்ல என அதன் பொறுப்பாளர் கருத்து தெரிவித்தது குறித்து பகிரங்க அறிவித்தல் ஒன்றை மக்களுக்கு விடுக்குமா? இல்லையேல் மக்கள் இனிமேலும் கழகத்துக்கு உதவி செய்வார்களா?

